சுருக்கம்

பள்ளிக்கல்வி – அரசு/ நகராட்சி/ உயர்நிலை/ மேல்நிலை பள்ளிகளில் 01.08.2021 அன்றைய நிலவரப்படி பட்டதாரி ஆசிரியர்கள் பணியாளர் நிர்ணயம் மேற்கொண்டமை- மாணவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் கூடுதல் பணியிடம் தேவையுள்ள பள்ளிகளுக்கு இயக்குநரின் பொதுத் தொகுப்பிலிருந்து 3000 ஆசிரியரின்றி உபரி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை பகிர்ந்தளிக்கப்பட்டது - பகிர்ந்தளிக்கப்பட்ட பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் மற்றும் இதரப்படிகள் ஆகியவற்றினை IFHRMS மூலம் பெற்று வழங்க இப்பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்ட அரசாணைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் இப்பணியிடங்களில் பணியாளர்களை நிரப்பிய நாளிலிருந்து ஒரு ஆண்டிற்கு மட்டும் தொடர் நீட்டிப்பு வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (ப.க5(1)த்துறை

அரசாணை(நிலை) எண். 92

நாள் 18.05.2022
திருவள்ளுவராண்டு 2053,
சுபகிருது வருடம், வைகாசி 4

படிக்கப்பட்டது:-

பள்ளிக் கல்வி ஆணையரின்ந.க.எண்.040678 / சி3 / இ1 / 2021.
நாள் 20.04.2022 மற்றும் 11.05.2022

************

மேலே படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி ஆணையரின் கடிதங்களில், 01.08.2021 அன்றைய நிலவரப்படி அரசு / நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடம் நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டதில் 2021-22-ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் மேற்படி பணியாளர் நிர்ணய கணக்கீட்டின்படி (6-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்புக்கு 1:35 என்ற விகிதாச்சாரப்படியும், 9-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு 1:40 என்ற விகிதாச்சாரப் படியும்) கூடுதல் தேவையுள்ள பள்ளிகள் (Need Schools) அதிகளவில் கண்டறியப்பட்டுள்ளது என்றும் மேற்படி

கணக்கீட்டின்படி கூடுதல் பணியிடங்கள் கண்டறியப்பட்டுள்ள பள்ளிகளுக்கு மாணவர்களின் தரமான கல்விக்கு கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் தேவைப்படுவதால் தற்போது பட்டதாரி ஆசிரியர் நிலையில் இயக்குநரின் பொதுத்தொகுப்பில் 4675 ஆசிரியரின்றி உபரி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் உள்ளது என்றும் இப்பணியிடங்கள் பல்வேறு காலக்கட்டங்களில் இயக்குநரின் பொதுத்தொகுப்பிற்கு சரண் செய்யப்பட்டவை என்றும் தற்போது, முன்னுரிமை அடிப்படையில் 9 மாவட்டங்களுக்கு 3000 பணியிடங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது என தெரிவித்துள்ளார்.

2. மேலும், மேற்படி கூடுதல் தேவையுள்ள பள்ளிகளுக்கு பகிரிந்தளிக்கப்பட்ட 3000 பணியிடங்களை IFHRMS இணைய தளத்தில் சேர்ப்பதற்கு இப்பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு அரசாணையின் நகல்கள், பணியிடம் நிரந்தரமா (அ) தற்காலிகமா என்ற விவரம் மற்றும் தற்காலிகப் பணியிடத்தின் தொடர் நீட்டிப்பு ஆணையின் நகல் ஆகியவை தேவையென சென்னை தெற்கு சம்பள கணக்கு அலுவலர் தெரிவித்துள்ளதாகவும், பள்ளிக் கல்வி இயக்குநரின் பொதுத் தொகுப்பிலிருந்து நடப்பாண்டில் (2021-2022) பள்ளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் ஏற்கனவே வெவ்வேறு அரசாணைகளின்படி, வெவ்வேறு மாவட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள பள்ளிகளுக்கு மாற்றம் செய்து ஒரே அரசாணையாக ஆணை வழங்கும்படி பள்ளிக் கல்வி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவை கவனமாக ஆய்வு செய்து அதனை ஏற்று, 9 மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கூடுதல் பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் மற்றும் இதரப்படிகள் ஆகியவற்றினை நடைமுறையில் உள்ள IFHRMS மூலமாக பெற்று வழங்க ஏதுவாக, இயக்குநரின் பொதுத் தொகுப்பிலிருந்து பகிர்ந்தளிக்கப்பட்ட 3000 ஆசிரியரின்றி உபரி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (Surplus Post without person) தோற்றுவிக்கப்பட்ட வெவ்வேறு அரசாணைகளை ஒருங்கிணைத்து அப்பணியிடங்களுக்கு, அப்பணியிடங்களில் பணியாளர்களை நிரப்பிய நாளிலிருந்து ஒரு ஆண்டிற்கு மட்டும் தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும், இவ்வாணையின் இணைப்பு 2-இல் கலம் 3-இல் குறிப்பிடப்பட்டுள்ள

பள்ளிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மேற்படி பணியிடங்கள் கலம் 7-இல் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிகளுக்கு ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.203/ADS(GKT)/CMPC/2022, நாள் 17.05.2022 மற்றும் PSLNo. 202204PSL0164—ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6.
சம்பள கணக்கு அலுவலர், தெற்கு/ வடக்கு/கிழக்கு, சென்னை-35/79/05.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை-15.
சம்மந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்கள்
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர், சென்னை-35.

<u>நகல்</u>

நிதித் (கல்வி II/ மை.ம.ஆ.பி.)துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்.

ந.க.எண்:- 40678/ கி3/ இ1/ 2021 நாள்:- 18.05.2022

அரசாணையின் நகல் தக்க நடவடிக்கைகளின் பொருட்டு சார்பு செய்யப்படுகிறது.

Joint Director (Personnel)
Directorate of School Education, Chennai-6

பெறுநர்:- முதன்மைக் கல்வி அலுவலர்கள்
1) திருவள்ளூர் 2) இராணிப்பேட்டை, 3) வேலூர் 4) திருவண்ணாமலை, 5) சேலம், 6) கடலூர், 7) கிருஷ்ணகிரி 8) தர்மபுரி 9) கள்ளக் குறிச்சி